திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தற்போது கடுமையான வறட்சி நிலவிக் கொண்டிருக்கிறது. தண்ணீர் பற்றாக்குறை என்பது எப்பொழுதும் நிரந்தரமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகையினாலே, இப்பொழுது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட விதை ரகங்கள், தண்ணீரை குறைவாகப் பாசனம் செய்து, அதன் மூலமாகப் பயன்படுகின்ற ரகங்களாக இருக்கின்றனவா? அல்லது மொத்தம் உற்பத்தி செய்யும் நாட்கள் குறைந்து அதிக மகசூல் வருகின்ற அளவுக்கு அந்த முயற்சி ஏதேனும் இதிலே கடைப்பிடிக்கப்படுகிறதா? அந்த விவரம் இருந்தால் தருவீர்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இப்பொழுது ஐ. ஆர். 50 என்ற நெல் ரகத்தை, வறட்சி தாங்கக்கூடிய, ஓரளவு தண்ணீர் குறைவாக இருந்தலே போதும். குறைந்த வயதுடையது என்கிற வகையிலே பரிந்துரை செய்திருக்கிறோம்.

பாபநாசம் மேல் அணைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட சீரமைப்புப் பணிகள்.

* வினா எண் 90—திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியில் உள்ள மேல்பாபநாசம் அணைசாலையில் கி.மீ. 10 முதல் கி.மீ. 24 வரையில் வெள்ளப் பாழ் சீரமைப்புப் பணியின்கீழ் அணைப்புத் தளம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன?

(இ) திட்ட மதிப்பீடு எவ்வளவு?

(ஈ) வேலை எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : விடை (அ, ஆ, இ, மற்றும் ஈ) 1979 அம் ஆண்டு நவம்பர் மாத வெள்ள நிவாரணத் திட்டத்தில் பாபநாசம் மேல் அணை சாலையில் சுமார் ரூ. 2.00 இலட்சம் மதிப்பீட்டில் வெள்ள நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. வெள்ள நிவாரணத்திற்கான மதிப்பீட்டில் தடுப்பு வேலைகள்உடனடியாக தேவைப்பட்ட அளவிற்கு போடப்பட்டிருக்கின்றன. ரூ. 2 லட்சம் செலவில் நிவாரண வேலைகள் யாவும் செய்யப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டன.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : பேரவைக் தலைவர் அவர்களே, தேவைப்பட்ட அளவுக்கு வேலைகள் கொடுக்கப்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். தேவைப்பட்ட அளவுக்குப் பூராவும் வேலைகள் முடிவடையவில்லை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

1983 பிப்ரவரி 1]

என்ற குறையை அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு கொண்டு வரவிரும்புகிறேன். சமீபத்தில்கூட அந்த வேலை சரியாக முடிக்கப்படாததன் விளைவாக லாரி ஒன்று பின்னுக்குத் தள்ளப்பட்டு ஒரு ஆள்கூட இறந்து போய்விட்டார் அரசலார் கோயிலினுடைய மடையிலே. ஆகவே, அந்த விட்டுப் போன வேலைகளை மீண்டும் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா என்பதைத் தெரிந்து காள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, வேலைகள் விடப்பட்டிருந்தால், அவை தொடர்ந்து நடைபெறும்.

ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள உபரி நிதியினைப் பயன்படுத்தும் திட்டம்.

*வினா எண் 91—திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சியில் நிதி இல்லாமல் இருந்து அதே சமயம் ஊராட்சி ஒன்றியங்களில் உபரிநிதி இருப்பின் ஊராட்சிக்கு டெலிவிஷன், குடிநீர் வசதி மற்ற வசதிகள் ஒன்றிய நிதியிலிருந்து செலவு செய்ய அரசு உத்தரவு அளிக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: போதிய நிதி வசதி இல்லாதிருப்பின், டெலிவிஷன் பெட்டியை வாங்கவும், பராமரிக்கவும் ஆகும் செலவை, ஊராட்சி ஒன்றியமும், சம்பந்தப்பட்ட ஊராட்சியும் பகிர்ந்துகொள்ள ஏற்கெனவே அரசாணை உள்ளது. அதேபோல ரூ. 3 இலட்சத்திற்கு மேல் உபரி நிதியுதவி ஊராட்சி ஒன்றியங்கள் உபரியுள்ள தொகையில் 25 சதவீதம் வரை குடிநீர் வசதிக்காகச் செலவிடலாமென ஏற்கனவே ஆணை உள்ளது.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி உபரி நிதி இருக்கிற சில ஒன்றியங்களில் டெலிவிஷனுக்கு ஒரு பகுதியைத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முழுத் தொகையையும் தரலாம். அதே போல, குடிநீர் வசதி. தெருக்குழாய்கள் இழுப்பது, தரைப் பாலங்கள், கல்வெட்டு கட்டுவது, பல்புகளைக் குழாய் விளக்குகளாக மாற்றுவது, இவைகளுக்கெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவரே அங்கீகாரம் அளிக்கக்கூடிய அளவிலே இருக்கவேண்டும். இப்போது டி. ஆர். டி. அளவிலே அங்கீகாரம் பெறவேண்டும். முன்பெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவரே உபரி நிதியை கிராமங்களுக்குச் செலவு செய்ய அங்கீகாரம் கொடுத்தார்கள். அந்த முறையை மீண்டும் கொண்டு வந்து, மாவட்ட ஆட்சித் தலைவரே, அங்குள்ள நிலைமையை அனுசரித்து,